முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 04.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 86/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீலாதேவி | மாவட்டம் | : | காஞ்சிபுரம் |
| க/பெ | : | கருணாகரன் | வயது | : | 45 |
| ஊர் | : | மாங்காடு (பூந்தமல்லி) | தொழில் | : | இல்லத்தரசி |

**பி.வா.சா. 1 (ஜீலாதேவி): வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாக்கல் செய்திருக்கும் வாதியானவர் எனக்கு என்ன உறவு என்றால் என் தந்தை ஆவார். அப்பாதுரை, கிஷ்டப்பன், நடேசன் ஆகிய மூவரும் யார் என்றால் அப்பாதுரை என்பவர் என்னுடைய தாத்தா ஆவார். கிஷ்டப்பன் என்பவர் வேலாயுதம் என்பவரின் அப்பா ஆவார். நடேசன் என்பவர் என் பெரியப்பா சீனுவாசனின் அப்பா ஆவார். வழக்கு சொத்தானது என் பாட்டனாரின் அப்பாவின் சொத்து என்று சொன்னால் சரிதான். என் பாட்டனாரின் அப்பாவின் பெயர் ரத்தினம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 152/5ஏ1 ஆகும். மேற்படி ரத்தினத்தின் வாரிசுகளாகிய அப்பாதுரை, கிஷ்டப்பன், நடேசன் ஆகிய மூவரும் சொத்தினை சரி சமமாக பிரித்துக்கொண்டார்களா என்றால் சரிதான். மேற்படி ஒவ்வொருவரும் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட பாகம் எடுத்துக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்பாதுரை பெற்ற பாகத்தினை வாதியான என்தந்தை லோகநாதன் அனுபவித்து வருகிறாரா என்றால் சரிதான். நடேசன் என்பவரின் பாகத்தினை மேற்படி வாதியாகிய என் தந்தை லோகநாதன் கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. கிஷ்டப்பன் என்பவரின் பாகத்தினை அவருடைய வாரிசுகளான வேலாயுதம் மற்றும் பிரேமா ஆகிய இருவரும் 30.06.1996 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் படி வாதியாகிய என் தந்தை லோகநாதன் கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கிரயம் வாங்கிய சொத்து எவ்வளவு சென்டுகள் என்றால் 12 சென்ட்டுகள் ஆகும். நான் கிரயம் பெற்ற பத்திரத்தில் வாதியாகிய லோகநாதன் 16 சென்ட் சொத்தினை 30.06.1996 தேதியிட்ட கிரயப்பத்திர விவரத்தினை குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. நான் என் தந்தை மீதும், அவரின் குடும்பத்தார் மீதும் பாகம் கோரி வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற 12 சென்ட் கிரயப்பத்திரத்தில் சொத்து விவரத்தில் ஜக்பந்தி குறிப்பிட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் காட்டப்படவில்லை மேற்படி ஜக்பந்தி குறிப்பிடப்படவேண்டிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். 16 சென்ட்டுக்கான ஜக்பந்தி காண்பித்துள்ளதால் 12 சென்ட்டுக்கான ஜக்பந்தி குறிப்பிடவில்லை. நான் சொல்வது தவறு என்றும் ஜக்பந்தியை அவசியமாக குறிப்பிட்டு கிரயம் பெற்றிருக்கவேண்டுமென்றும் அவ்வாறு ஜக்பந்தியை குறிப்பிடாமல் கிரயம் பெற்றது தவறு என்று சொன்னால் சரியல்ல.

3. நான் வாதி கிரயம் பெற்ற விவரத்தினை தெரிந்துகொண்டுதான் இல்லாத சொத்தினை கிரயம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 (வாதி 30.06.1996 தேதியிட்ட கிரய ஆவணம்) ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் ஜக்பந்தி என்னவென்றால் கிழக்கில் குட்டை, மேற்கு ஜெயராமன், வடக்கு கணேசன், தெற்கு லோகநாதன். நான் கிரயம் பெற்ற

சொத்தானது எங்கு உள்ளது என்றால் வாதியின் சொத்திற்கு வடக்கில் உள்ளது. மேற்படி 30.06.1996 தேதியிட்ட கிரய ஆவணத்தில் பிரேமா, வேலாயுதம் ஆகியக இருவரும் மேற்படி கிரயம் செய்யும்போது கிரய ஆவணத்தில் "நாங்கள் நிறுத்திக்கொண்ட நிலத்திற்கு 12 சென்ட் மிகுதி" மற்றும் ஜக்பந்தி குறிப்பிட்டு கிரயம் செய்திருப்பார்கள். அவ்வாறு எதுவும் குறிப்பிடாததால் வாதியானவா் 16 சென்ட் முழுவதையும் கிரயம் பெற்றுள்ளாா் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே 12 சென்ட் உள்ள நிலம் இருந்தது என்றால் அதனை ஜக்பந்தியோடு குறிப்பிட்டு கிரயம் பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

4. சா்வே எண் 152/5ஏ சொத்தானது எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பதை கண்டறிய கோா்ட் மூலமாக நீதிமன்ற ஆணையா் ஒருவரை நியமித்துதான் தெரிந்துகொள்ளமுடியும் என்றால் நான் ஏற்கனவே சொத்தினை அளந்துதான் கிரயம் பெற்றேன். மேற்படி சொத்தினை அளக்கப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**(கற்றறிந்த எதிா்தரப்பு வழக்கறிஞா் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.04 16:47:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு